**டிசம்பர் – 09**

# TNPSC துளிகள்

❖ திருவண்ணாமலை தீபத் திருவிழாவிற்கு துணி மற்றும் சணல் பைகளைக் கொண்டு செல்லும் பக்தர்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளி பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

❖ நாட்டின் அந்நிய செலாவணி இருப்பு முதன்முறையாக 450 பில்லியன் டாலர்களைத் தாண்டியுள்ளது. இது மத்திய ரிசர்வ் வங்கியைச் சந்தையில் இருந்து டாலர்களை வாங்குவதற்கு வழி வகுத்துள்ளது. இதனால் இந்தியப் பணமான ரூபாயின் மதிப்பு துரித அதிகரிப்பை தடுக்க முடிகின்றது.

❖ மதுபான அதிபர் விஜய் மல்லையாவுக்கு அடுத்து, தப்பியோடிய பொருளாதாரக் குற்றவாளி என்று 2018 ஆம் ஆண்டு "தப்பியோடிய பொருளாதாரக் குற்றவாளிகள் சட்டத்தின்" படி அறிவிக்கப்பட்ட இரண்டாவது தொழிலதிபராக நீரவ் மோடி உள்ளார்.
    - உலகெங்கிலும் உள்ள வங்கிகள் பயன்படுத்தும் மென்பொருளில் மோசடி செய்ததன் மூலம் பஞ்சாப் நேஷனல் வங்கியை ரூ .10,000 கோடிக்கு மேல் மோசடி செய்ததாக நீரவ் மோடி மீது குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

❖ பவன் சூறாவளி என்பது வட இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் உருவான 8வது சூறாவளி ஆகும். இந்தப் பிராந்தியத்தில் 1976 ஆம் ஆண்டில் உருவாகிய ஒன்பது சூறாவளிகளுக்குப் பிறகு ஒரே ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான சூறாவளிகள் உருவானது இதுவேயாகும்.
    - உலக வானிலை அமைப்பின் வழிகாட்டுதல்களுடன் இலங்கையின் பரிந்துரைப் படி இந்த சூறாவளிக்கு 'பவன்' என்ற பெயர் சூட்டப் பட்டுள்ளது.

❖ ஒடிசாவில் பாயும் மகாநதி நதியின் பல கிளை நதிகளில் ஒன்றான சுகபைகா நதியானது அரசாங்கத்தின் பராமரிப்பு இல்லாததன் காரணமாக படிப்படியாக குறைந்து வற்றியுள்ளது. இந்நதியானது ஆற்றங்கரை அரிப்புக்கு உள்ளாகி, ஆறு முழுவதும் பூங்கோரைகள் நிறைந்துள்ளன.

# தேசியச் செய்திகள்

## சிறப்புப் பாதுகாப்புப் படை (திருத்த) மசோதா - 2019

❖ 2019 ஆம் ஆண்டுக்கான சிறப்புப் பாதுகாப்புப் படை (திருத்த) மசோதாவை (Special Protection Group - SPG) நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

❖ SPG மசோதாவானது 1988 ஆம் ஆண்டு SPG சட்டத்தில் திருத்தம் செய்துள்ளது.

❖ மசோதாவில் முன்மொழியப்பட்ட திருத்தங்களானவை அரசு நிதியில் "மிக முக்கியமான நபரது பாதுகாப்பின்" மீதான நிதிச் சுமையைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### *திருத்தங்கள்*

❖ SPG பாதுகாப்பு குறைப்பு - பிரதமர், முன்னாள் பிரதமர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கு (அவருடன் அவரது அதிகாரப்பூர்வ இல்லத்தில் வசிக்கும்) மட்டுமே பாதுகாப்பு வழங்கப்படும்.

❖ கால அவகாசம் குறைப்பு - முன்னாள் பிரதமர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்பத்தினருக்கு அவர்கள் பதவியை விட்டு விலகிய பின் ஐந்து வருட காலத்திற்கு மட்டுமே பாதுகாப்பு வழங்கப் படும்.

### *சிறப்புப் பாதுகாப்புப் படை பற்றி*

- பிரதமர், முன்னாள் பிரதமர்கள் மற்றும் அவர்களது உடனடி குடும்ப உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்காக 1985 ஆம் ஆண்டில் SPG படை தோற்றுவிக்கப் பட்டது.
- 1984 ஆம் ஆண்டில் அப்போதையப் பிரதமரான இந்திரா காந்தி தனது சொந்த மெய்க் காவலர்களால் படுகொலை செய்யப்பட்ட பின்னர் இது நிறுவப்பட்டது.
- SPG ஆனது மத்திய ரிசர்வ் காவல் படை, எல்லைப் பாதுகாப்புப் படை மற்றும் பிற மத்திய & மாநிலக் காவல் படையினரைக் கொண்டுள்ளது.
- குறைந்த அச்சுறுத்தல் காரணமாக இந்தியக் குடியரசுத் தலைவருக்கு SPG பாதுகாப்பு வழங்கப் படுவதில்லை. இவர் இந்திய இராணுவத்தின் குடியரசுத் தலைவருக்கான பாதுகாப்புப் படைப் பிரிவால் பாதுகாக்கப் படுகிறார்.

# சர்வதேசச் செய்திகள்

## சீனா - புதிய டிஜிட்டல் நீதிமன்றங்கள் அறிமுகம்

- சீன அரசானது செய்திப் பரிமாற்றச் செயலிகளின் மூலம் செயற்கை நுண்ணறிவு நீதிபதிகளைக் கொண்டு இணையவழி - நீதிமன்றங்களைப் பயன்படுத்தித் தீர்ப்புகள் வழங்குவதற்கான (டிஜிட்டல் நீதிக்கான) புதிய முறையை அறிமுகப் படுத்தியுள்ளது.
- சமூக ஊடகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மெய்நிகர் நீதிபதிகளைக் கொண்டு டிஜிட்டல் நீதிமன்றங்களை சீனா உருவாக்கியுள்ளது.
- சீனாவின் முன்னணி சமூக ஊடக செய்தித் தளமான "வீசாட்" செயலியில் உள்ள "நடமாடும் நீதிமன்றம்" என்ற விருப்பத் தேர்வானது பயனர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் வழக்குகளைத் தாக்கல் செய்தல், விசாரணைகள் மேற்கொள்ளல் மற்றும் சான்றுகள் பரிமாற்றம் செய்தல் ஆகியவற்றை அனுமதிக்கின்றது.





# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியப் பொருளாதார ஆய்வறிக்கை - OECD

- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு (Organisation for Economic Co-operation and Development - OECD) என்பது பாரிஸை தளமாகக் கொண்ட அரசாங்கங்களுக்கு இடையிலான ஒரு பொருளாதார அமைப்பாகும்.


- OECD அமைப்பின் பொருளாதார ஆய்வுகளின் 2019 பதிப்பு: இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2019-20 ஆம் நிதியாண்டில் 5.8 சதவீதமாக உயரும் என்று இந்திய அறிக்கையானது கணித்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டில், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 6.21 சதவீதமாகவும் 2021 ஆம் ஆண்டில் 6.4 சதவீதமாகவும் இருக்கும் என்று இந்த ஆய்வு தெரிவித்துள்ளது.
- தரமான வேலைகளை உருவாக்குதல், தகுதிக்கேற்ற வேலைவாய்ப்பின்மை மற்றும் வருமான ஏற்றத் தாழ்வு ஆகியவை இந்தியாவில் சவால்களாகவே உள்ளன என்றும் இந்த அறிக்கை கூறியுள்ளது.
- மேலும் சுகாதாரம் மற்றும் கல்விக்காக பொதுச் செலவுகளில் அதிக முதலீடு செய்வது மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (மொத்த உள்நாட்டு உற்பத்தி) பொதுக் கடனுக்கான நிர்ணயிக்கப்பட்ட இலக்கை கடைபிடிப்பது போன்றவையும் சவால்களாக உள்ளன என்று அந்த அறிக்கை கூறியுள்ளது.
- வரவு - செலவுத் திட்டப் பரிவர்த்தனைகள் மற்றும் தொடர்ச்சியான கடன்களின் வெளிப்படைத் தன்மையை நிர்வகிக்க ஒரு சுயாதீனமான நிதிக் குழுவை உருவாக்க இந்த ஆய்வு பரிந்துரைத்துள்ளது.



# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஸ்வீடனின் Torrefaction (தாளடியிலிருந்து நிலக்கரி போன்ற பொருளை உருவாக்கும் வெப்ப முறை) தொழில்நுட்பம்

- தில்லியில் காற்றின் தரம் குறைவதைத் தவிர்க்கும் பொருட்டு, இந்திய அரசானது ஸ்வீடன் நாடு பின்பற்றும் தொழில்நுட்பத்தை, அதாவது நெல் தாளடியிலிருந்து 'உயிர் நிலக்கரியாக' மாற்றக் கூடிய Torrefaction என்ற முறையை சோதனை செய்து வருகின்றது.
- இந்தத் தொழில்நுட்பத்தின் சாத்தியக் கூறுகளை மதிப்பிடுவதற்காக பஞ்சாப் மாநிலத்தின் மொஹாலியில் உள்ள தேசிய வேளாண் உணவு உயிரி தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் ஸ்வீடன் நிறுவனத்துடனான ஒரு சோதனைத் திட்டத்திற்கு அரசாங்கம் நிதியளித்துள்ளது.
- Torrefaction என்பது உயிர்மப் பொருளை (250 டிகிரி செல்சியஸ் - 350 டிகிரி செல்சியஸ் அளவிலான வெப்பநிலைக்கு உட்படுத்தி) நிலக்கரி போன்ற பொருளாக மாற்றுவதற்கான ஒரு வெப்ப செயல்முறையாகும். இது அசல் உயிர்த்திரளை விட சிறந்த எரிபொருள் பண்புகளைக் கொண்டுள்ளது.
- நன்மைகள் – இம்முறையின் மூலம் உருவாக்கப்பட்ட உயிர்த் திரளானது எளிதில் உடையக் கூடியது. இது குறைந்த ஆற்றலைப் பயன்படுத்தக் கூடியது. இது கரியமில வாயு உமிழ்வை 95% குறைக்கும் திறன் கொண்டது.
- இது நிலக்கரியுடன் ஒப்பிடப்படும் போது குறைந்த கந்தகம் மற்றும் சாம்பல் தொகுதிகளைக் கொண்டுள்ளது.





## ஹெரா திட்டம்

- ஐரோப்பிய விண்வெளி நிறுவனமானது ஒரு சிறுகோளை ஆராய விண்கலத்தைச் செலுத்தும் திட்டதின் ஐரோப்பிய அங்கமான ஹெராவின் நிதிநிலை அறிக்கைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- பூமிக்கு அருகிலுள்ள சிறுகோள்களின் Didymos ஜோடியான ஈரிணைய சிறுகோள் அமைப்பினை ஆராய்ச்சி செய்வதற்கு ஹெரா திட்டத்தின் விண்கலமானது 2024 ஆம் ஆண்டில் ஏவப்பட உள்ளது.

***ஹெரா திட்டம் & DART பற்றி***

- ஒரு ஈரிணைய சிறுகோளை ஆராய இருக்கும் முதல் விண்கலம் இதுவாகும்.
- இந்தத் திட்டமானது சிறிய பொருள்களாலான பெரிய கட்டமைப்பைக் கொண்ட, ஒரு சிறுகோளைச் சுற்றி வரக் கூடிய "65803 Didymos" என்ற ஈரிணைய ஜோடியை ஆராய்வதற்காக 2023 ஆம் ஆண்டில் ஏவப்பட உள்ளது. இதன் பொருத்தமான புனைப்பெயர் Didymoon என்பதாகும்.

- இருப்பினும், ஹெரா திட்டத்தின் விண்கலமானது Didymosஐ முதலில் சென்றடையாது.
- நாசா அமைப்பானது 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் இரட்டை சிறுகோள் திசைதிருப்புதல் சோதனையை (Double Asteroid Redirection Test - DART) தொடங்கத் திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டமானது இதன் கிரகப் பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக Didymoonஐ ஆராய உள்ளது.
- DART என்பது அபாயகரமான சிறுகோள் ஒன்று பூமியில் ஏற்படுத்தும் தாக்கத்தைத் தடுப்பதற்கான தொழில்நுட்பங்களில் ஒன்றான இயக்கவியல் தாக்கி என்ற கிரகப் பாதுகாப்பு-உந்துதல் சோதனையை நிகழ்த்தும் ஒரு திட்டமாகும்.
- ஒரு சிறிய சிறுகோள் மீதான இயக்க ஆற்றல் விளைவுகளைப் பரிசோதித்து அறிவதே DARTன் முதன்மையான நோக்கமாகும்.
- சர்வதேச 'சிறுகோள் தாக்க விலகல் மதிப்பீடு' பரிசோதனையின் ஒரு பகுதியாக DART மற்றும் ஹெரா திட்டங்கள் ஒரே மாதிரியாகக் கருதப் படுகின்றன.




# மாநிலச் செய்திகள்

## ஒடிசாவின் கலியா திட்டம் PM - KISAN திட்டத்துடன் இணைப்பு

- ஒடிசா அரசாங்கம் அதன் முதன்மைத் திட்டமான கலியாவை, நிதிக் கட்டுப்பாடு காரணமாக, மத்திய அரசின் பிரதான் மந்திரி கிசான் சம்மன் நிதி (PM- KISAN) திட்டத்துடன் இணைக்க முடிவு செய்துள்ளது.
- இந்தப் புதிய திட்டத்தின் படி, கலியா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூ.10,000க்குப் பதிலாக, இப்போது மாநில அரசு ரூ.4,000 வழங்கும். மீதமுள்ள ரூ.6,000 PM - KISAN திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.
- கலியா திட்டத்தின் கீழ் மாநில அரசு ஆண்டுக்கு ரூ.12,000ஐ விவசாயிகளின் வங்கிக் கணக்கில் தொடர்ந்து செலுத்த இருக்கின்றது.

***PM- KISAN திட்டம் பற்றி:***

- இது மத்திய வேளாண் மற்றும் விவசாய நல அமைச்சகத்தின் கீழ் உள்ள மத்திய அரசுத் திட்டமாகும்.
- இந்தத் திட்டத்தின் கீழ், 2 ஹெக்டேர் வரை சாகுபடி செய்யக் கூடிய சொந்த நிலம் கொண்ட விவசாயக் குடும்பங்களுக்கு நேரடி வருமான உதவியாக ஆண்டுக்கு ரூ.6,000

வழங்கப் படும்.

### டார்ஜிலிங் தேநீர் – புவிசார் குறியீடு

- டார்ஜிலிங்கின் இரண்டு தேநீர் வகைகள் "1999 ஆம் ஆண்டின் பொருட்களின் புவியியல் குறியீடு (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்" கீழ் பதிவு செய்யப் பட்டுள்ளன.
- இதில் டார்ஜிலிங்கின் பிரசித்தி பெற்ற பசும் தேநீர் மற்றும் வெள்ளை தேநீர் ஆகியவை அடங்கும்.
- உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினராகவும், டிரிப்ஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்தது இட்டவராகவும் உள்ள இந்தியா பொருட்களுக்கான புவியியல் குறியீட்டுச் சட்டத்தை 2009 ஆம் ஆண்டில் இயற்றியது.







## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### யனோமாமி ஷாமன் டேவி கோபனேவா – சிறந்த வாழ்வாதார விருது

- “மழைக்காடுகளின் தலாய் லாமா” என்று அழைக்கப்படும் புகழ்பெற்ற யனோமாமி ஷாமன் டேவி கோபெனாவா என்பவருக்கு 2019 ஆம் ஆண்டின் சிறந்த வாழ்வாதார விருது வழங்கப் பட்டுள்ளது.
- இந்த விருதானது “மாற்று நோபல் பரிசு” என்று அழைக்கப் படுகிறது.
- சிறந்த வாழ்வாதார விருது என்பது "மக்கள் எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்சனைகளுக்கு நடைமுறை அடிப்படையிலான மற்றும் முன்மாதிரியான தீர்வுகளை வழங்குபவர்களைக் கௌரவிப்பதற்கும் ஆதரிப்பதற்கும்" வழங்கப்படும் ஒரு சர்வதேச விருது ஆகும்.
- இந்தப் பரிசானது 1980 ஆம் ஆண்டில் ஜெர்மன்-ஸ்வீடிஷ் கல்விசார் நிதியுதவி வழங்குபவரான ஜாகோப் வான் யுஎக்ஸ் குல் என்பவரால் நிறுவப் பட்டது. இது ஆண்டுதோறும் டிசம்பர் மாதத் தொடக்கத்தில் வழங்கப் படுகின்றது.
- டேவி அமேசானியப் பிரதேசத்தைப் பாதுகாக்க அவரது இன மக்களை 20 ஆண்டு காலமாக வழி நடத்திக் கொண்டுள்ளார்.


Celebration of the 2019
'Alternative Nobel' Prize
Laureates

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★